





# தேவன் நம்பத்தகுந்தவர்!

பாடம் 12 டிசம்பர் 20, 2025


“கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த
நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும்
தவறிப்போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று.” (யோசுவா 21:45)

யோசுவா ஏற்கனவே வயது முதிந்தவராக இருந்தார். இன்னும் கைப்பற்றபட வேண்டிய தேசங்கள் இருந்தன. அவற்றை தொடர்நது கைப்பற்றுவதற்காக புதிய தலைவர்களை ஒன்று கூட்டி ஊக்குவித்தார்

அதே நேரத்தில், அதில் உள்ள அபாயங்களையும் அவர் எடுத்துரைத்தார். உண்மையில் ஒரே ஒரு அபாயம் தான் இருந்தது - இன்று நாமும் அந்த அபாயத்தை எதிர்கொள்கிறோம்:

தேவனுக்கு உண்மையாக இருப்பதை விட்டுவிடுதல்: தேவனுடைய உண்மைக்கு பதிலாக நம்மிடமிருந்து அவநம்பிக்கையை அளித்தல். வெற்றியை அடையும் வல்லமை அவர்களிடத்தில் அல்ல, அது தேவனிடத்தில் இருந்தது. ஆகையால் தேவன் அவர்களுக்கு ஏற்கனவே வெளிப்படுத்தின உண்மையை அவர் அவர்களுக்கு நினைப்பூட்டினார்;மேலும் தேவன் தொடர்ந்து உண்மையாக இருப்பதாக உறுதி அளித்தார்.





- தேவனுடைய உண்மைத்தன்மை (யோசுவா 21:43-45)
- தேவன் என்ன செய்திருக்கிறார், தேவன் என்ன செய்வார் (யோசுவா 23:1-5)
- உண்மைக்கான பரிசு (யோசுவா 23:6-10)
- நாம் என்ன செய்ய வேண்டும் (யோசுவா 23:11-14)
- உண்மையில்லாததற்கான தண்டனை (யோசுவா 23:15-16)

# தேவனுடைய உண்மைத்தன்மை

"கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று." (யோசுவா 21:45)

தேவன் இஸ்ரவேலுக்கு "முழு தேசத்தையும்" கொடுத்தார் (யோசு. 21:43) மற்றும் அவர்களுடைய "எல்லா சத்துருக்களையும்" அவர்கள் கைகளில் ஒப்படைத்தார் (யோசு. 21:44), ஆகையால் "ஒரு வார்த்தையும் தவறாமல் எல்லாம் நிறைவேறியது" (யோசு. 21:45).



"எல்லாம்" என்ற சொல்லின் மீண்டும் மீண்டும் பயன்பாடு, தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் எவ்வளவு உண்மையுள்ளவர் என்பதை வலியுறுத்துகிறது. அவர்களுடைய சத்துருக்கள் தேவனால் தோற்கடிக்கப்பட்டார்கள். தேவன் ஏற்கனவே அந்த தேசத்தை அவர்களுக்காக கைப்பற்றியிருந்ததால், அவர்கள் அந்த தேசத்தில் குடியிருக்க முடிந்தது. இதுவரை தேவன் தமது வாக்குத்தத்தங்களை காத்துக் கொண்டிருந்ததால், எதிர்காலத்திலும் அவர் அவற்றை தொடர்ந்து காத்து கொள்வார் என்ற உறுதியும் அவர்களுக்கு இருந்தது.



இவை எல்லாம் நம்முடைய நன்மைக்காகவே செயல்படுகின்றன. அவர் எப்போதும் உண்மையாகவே இருக்கிறார். (உபா. 7:9; சங். 117:2; புலம். 3:22-23). அவர் நம்மை இரட்சிப்பதாகவும், பூமியை சுதந்தரமாக அளிப்பதாகவும் வாக்குத்தத்தம் செய்துள்ளார்: அந்த வாக்குத்தத்தை அவர் நிச்சயமாக நிறைவேற்றுவார் (பிலிப். 1:6; 1 பேது. 1:5; சங். 37:29).

# தேவன் என்ன செய்திருக்கிறார்? என்ன செய்ய போகிறார்

“உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு முன்பாக இந்தச் சகல ஜாதிகளுக்கும் செய்த யாவையும் நீங்கள் கண்டீர்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணினார்.” (யோசுா 23:3)

மூப்பர்களுக்கு சொன்ன தனது உரையில், யோசுவா முதலில் தேவன் ஏற்கனவே செய்த காரியங்களையும், அவர் இன்னும் செய்யவிருக்கும் காரியங்களையும் நினைவூட்டுகிறார்:




அவர் மற்ற ஜாதிகளுக்கு எதிராக யுத்தம் பண்ணினார் (யோசு. 23:3)



தேசத்தை கோத்திரங்களுக்கு இடையே பங்கிட்டு அளித்தார்(யோசு. 23:4)



இன்னும் மீதமுள்ள ஜாதிகளையும் அவர் அகற்றப்பபோகிறார் (யோசு. 23:5)





இவை அனைத்தும் (இதுவரை செய்யப்பட்டதையும், இனி செய்யப்பட இருப்பதையும்) இஸ்ரவேலுக்கு ஒரே ஒரு நிபந்தனையை சார்ந்தே இருந்தது: கீழ்படிதல் (யோசு. 23:6).


இஸ்ரவேலின் வரலாறு இன்று நமக்கு ஒரு பாடமாக இருக்கிறது. தேவன் ஏற்கனவே பாவத்தின் மேல் வெற்றி பெற்றுள்ளார். இயேசுவின் பலியினால் நமக்கு இரட்சிப்பின் நிச்சயத்தை அளித்துள்ளார் (கொலோ. 2:15).

போராட்டத்தை தொடர்ந்து நடத்துவது நம்முடைய பொறுப்பு. வெற்றியுள்ள ஜீவியத்தை வாழ, பரிசுத்த ஆவியின் மேல் நம்பிக்கை வைத்து நடக்க வேண்டும் (2 கொரி. 10:3-5; எபே. 6:11-18).

# உண்மைக்கானப் பரிசு



"உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்." (யோசுவா 23:10)



இஸ்ரவேல் தேவனுக்கு உண்மையாக இருந்திருந்தால், அவர்களுடைய எல்லா சத்துருக்களின் மேலும் முழுமையான மற்றும் தீர்மானமான வெற்றியை பெறுவார்கள் (யோசு. 23:6, 10). கானான் தேசத்தை கைப்பற்றிய சூழ்நிலையில், தேவனுக்கான உண்மை மூன்று குறிப்பிட்ட வழிகளில் வெளிப்பட வேண்டியதாக இருந்தது:

இத்தேசத்தின் குடிகளை திருமணம் செய்ய வேண்டாம்(யோசு. 23:7மு)

பிற தெய்வங்களின் பெயர்களை உச்சரிக்க வேண்டாம்(யோசு. 23:7ந)

பிற தெய்வங்களை வணங்க வேண்டாம் (யோசு. 23:7பி)




அவர்கள் ஆவிக்குரிய தூய்மையை பாதுகாக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அத்தேசத்து குடிகளை திருமணம் செய்திருந்தால், இறுதியில் அவர்களையே ஆராதிக்க தொடங்கியிருப்பார்கள். இவ்விதமாகத்தான் சாலமோனின் விசுவாச வீழ்ச்சி ஆரம்பமானது (1 இராஜாக்கள் 11:4). அதுபோல, விசுவாசமில்லாதவர்களுடன் திருமணம் செய்ய வேண்டாம் என்று கிறிஸ்தவர்கள் நாமும் அறிவுறுத்தப்படுகிறோம் (2 கொரி. 6:14-16).

# நாம் என்ன செய்ய வேண்டும்?

"ஆகையால் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரும்படி, உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்." (யோசுவா 23:11)






யோசுவாவின் உரையின் மையக் கருத்து வசனம் 11ல் தெளிவாகக் காணப்படுகிறது: தேவனை நேசிப்பது.

இஸ்ரவேல் வேறு தேவர்களை நேசிக்காமல் இருப்பதன் மூலம், தேவனிடத்திலுள்ள தங்களுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாக இருந்தது, இல்லையெனில் அது அவர்களுக்கு கடும் பாதிப்பை உண்டாக்கியிருக்கும் (யோசு. 23:12-13).

கூடுதலாக, அந்த நேசத்தை வளர்க்கும் ஒரு ஊக்கத்தையும் யோசுவா முன் வைக்கிறார்: தேவனுடைய உண்மைத்தன்மை (யோசு. 23:14).

இன்றைக்கு நமக்கு இன்னும் பெரிய ஊக்கம் உள்ளது: இயேசுவின் எடுத்துக்காட்டு (யோ. 13:34).



தமது அன்பிற்கு பதிலளிக்கும் ஒவ்வொருவருடனும், தேவன் நெருக்கமானதும் தனிப்பட்டதுமான உறவை ஏற்படுத்த விரும்புகிறார்.

ஆகையால், எல்லாரிடத்திலும் அவர் வைத்துள்ள பரஸ்பர அன்பே, நம்முடைய விருப்பத்துடனும் பரஸ்பர அன்புடனும் வெளிப்படும் அன்புக்கான அடித்தளமாக இருக்கிறது.



# உண்மையில்லாதற்கான தண்டனை

"இப்பொழுதும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே சொன்ன நல்ல காரியமெல்லாம் உங்களிடத்திலே எப்படி நிறைவேறிற்றோ, அப்படியே, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய உடன்படிக்கையை நீங்கள் மீறி, அந்நிய தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்து கொள்ளுங்காலத்தில்," (யோசுவா 23:15)

யோசுவா தனது உரையை, கீழ்படிலின்மையின் விளைவுகளை பற்றிய கடுமையான எச்சரிக்கையுடன் முடிக்கிறார்: தேவனுடைய கோபத்தை அனுபவித்தல் (யோசு. 23:15-16).

உடன்படிக்கையை வெளிப்படையாக மீறுவதால், யேகோவாவின் கோபத்தை தூண்டுவதன் விளைவுகளை இஸ்ரவேல் நன்கு அறிந்திருந்தது.





நமக்காக தமது குமாரனை கொடுக்க தூண்டிய அதே அன்பே, பாவத்தை பிடிவாதமாகப் பிடித்துக் கொள்ளுகிறவர்கள் மேல் கோபமாக வெளிப்படுகிறது (யோவான் 3:16; ரோமர் 2:5).

இஸ்ரவேல் தோல்வியடைந்து தண்டனையை அனுபவித்தார்கள். இன்றைக்கு நாம் வேறொரு வரலாற்றை எழுதும் வாய்ப்பை பெற்றுள்ளோம்: அவருடைய அன்பில் நிலைத்திருந்து, அவருக்கு உண்மையாக இருக்க வேண்டும் (யோவான் 15:9).